

# தி. ஞானசேகரன்
## எழுத்தாளர் - இதழாசிரியர்

ஈழத்து இலக்கிய உலகில் 50 வருடங்களாக இயங்கி வருபவர்.

- வைத்தியராகத் தொழில் புரிபவர்.
- சிறுகதை, குறுநாவல், நாவல், கட்டுரை, விமர்சனம், பயண இலக்கியம், நூற்பதிப்பும் வெளியீடும், இதழியல் ஆகிய துறைகளில் ஈடுபட்டுவருபவர்.
- இலங்கை அரசின் கலாபூஷணம் விருது பெற்றவர்.
- இவர் இதுவரை 10 நூல்கள்ள எழுதியுள்ளார். இவற்றுள் 'குருதிமலை', 'புதிய சுவடுகள்' ஆகிய நாவல்கள் இலங்கை தேசிய சாகித்திய விருதினைப் பெற்றவை. 'லயத்துச் சிறைகள்', 'கவ்வாத்து' ஆகிய நாவல்கள் மத்திய மாகாண சாகித்திய விருதினைப் பெற்றவை.
- குருதிமலை (மலையக நாவல்) 1992-1993 காலப்பகுதியில் தமிழக மதுரை அமெரிக்கன் கல்லூரியில் முதுமாணி (M.A.) பட்டப்படிப்புக்குப் பாடநூலாக விளங்கியது. இந்நாவல் சிங்கள மொழியிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டது.
- இவரது 'அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்' என்ற சிறுகதைத் தொகுதி தற்போது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கலைமாணி (B.A.) வகுப்புக்குப் பாட நூலாக விளங்குகிறது.
- 2000ஆம் ஆண்டுமுதல் 'ஞானம்' என்ற மாதாந்த கலை இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டு வருகிறார்.


- குடும்பப் பின்னணி
- இலக்கியப் பிரவேசம்
- சிறுகதை ஆசிரியராக...
- நாவல் ஆசிரியராக...
- நேர்காணல்கள்...
- பயண இலக்கியகர்த்தாவாக...
- இதழாசிரியராக...
- பதிப்பாளராக...
- இலக்கியச் செயற்பாட்டாளராக...
- சமூக சேவையாளராக...
- கௌரவங்கள்...


தொகுப்பு: கவிஞர் குறிஞ்சிநாடன்
27.07.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பப் பின்னணி

ஈழத்து இலக்கிய உலகில் 50 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் தி. ஞானசேகரன் அவர்கள் நாடறிந்த ஓர் எழுத்தாளரும், இதழாசிரியருமாவார்.

1941ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி து. தியாகராசா ஐயர் - பாலாம்பிகை தம்பதியின் புதல்வராக யாழ்ப்பாண மண்ணில் பிறந்த இவர், புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் பாடசாலை, உரும்பராய் இந்துக் கல்லூரி, இலங்கை மருத்துவக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். அத்துடன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் படிப்பை மேற்கொண்டு கலைமாணி (B.A) பட்டதாரியாகவும் விளங்குகிறார். டாக்டராகப் பணியாற்றி வருகின்றார்.

இவருக்கு இளவயதில் குருகுல முறையில் கல்வியூட்டியவர் இவரது பெரிய தந்தையாரான து. குமாரசாமி ஐயர் அவர்கள்.

லலிதாம்பாள், கெங்காதரக் குருக்கள், சாமிநாத ஐயர், ஆகியோர் இவரது சகோதரர்களாவர். 1971ஆம் ஆண்டில் கீரிமலை சமஸ்கிருத பேராசான் மகாமகோபாத்தியாய ப.இராமையர் அவர்களின் புதல்வி ஞானலட்சுமி அவர்களைத் திருமணம் செய்துகொண்டார். இவரது மனைவி முன்னைநாள் மத்தியமாகாண கல்வித் திணைக்கள இந்துசமயபாட இணைப்பாளரும் ஆசிரிய ஆலோசகருமாவார். இராஜேஸ்வரன், வசுந்தரா, பாலச்சந்திரன் ஆகியோர் இத்தம்பதியின் அன்புச் செல்வங்கள்.


இவரது இளம் வயது முதல் இவர் ஓர் இலக்கியச் சூழலில் வளர்ந்தார். தொல்காப்பியத்துக்கு விளக்கவுரை எழுதிய வித்துவசிரோமணி சி. கணேசையர் இவரின் பூட்டனார். கதாப்பிரசங்க விற்பன்னராக விளங்கிய மணி ஐயர் என்கின்ற சுவாமிநாததம்பிரான் சுவாமிகள் இவரது தாய் மாமனாராவார். இவரே தற்போது நல்லூரில் உள்ள ஆதீனத்தை நிறுவியவர். தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றியவர். இவர்களைவிட இவரது உறவினர் பலர் பழந்தமிழ் இலக்கியங்களில் பரிசயம் உள்ளவர்களாக இருந்தனர். எந்தவொரு சம்பவத்தையும் பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டுக் களுடன் தொடர்புபடுத்தி விளக்கி இலக்கியச் சுவையுடன் பேசவல்ல பலர் இவரின் உறவினர்களாக இருந்தனர். இவர்களில் சிலர் கோவில்களில் புராண படனங்களின் போது பயன் சொல்வதில் வல்லமை பெற்றிருந்தனர்.

இதன் காரணமாக இவருக்கு இளம் வயதிலேயே பழந்தமிழ் இலக்கியங்களில் பரிசயம் ஏற்பட்டது. பாடசாலையில் கற்கும் காலத்திலேயே இவரது தாயார் இவரது வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தார். அக்காலகட்டத்தில் கல்கி, ஆனந்தவிகடன், கலைமகள் போன்ற சஞ்சிகைகளை வாசிக்கத் தொடங்கிய இவர், கல்கி, அகிலன், சாண்டில்யன், ஜெயகாந்தன், மு.வ., புதுமைப்பித்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை கலாசாரப் பேரவை நடத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றமைக்கு பிரதம மந்திரி திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் பரிசினை வழங்குகின்றார்.



ஆகியோரின் படைப்புகளை ஆர்வத்துடன் வாசித்துவந்தார். இதனால் இவர்களைப்போல தானும் கதைகள் எழுத வேண்டும் என்ற ஆர்வம் இவருக்கு ஏற்பட்டது.

இந்தியாவிலிருந்து கண்ணன் என்ற சிறுவர்களுக்கான சஞ்சிகையொன்று அக்கால கட்டத்தில் வெளிவந்து கொண்டிருந்தது. பள்ளிப் பராயத்தில் அச்சஞ்சிகைக்கு சிறு துணுக்குகள், வாசகர் கடிதங்கள் போன்றவற்றை அடிக்கடி எழுதி வந்தார். இவை பிரசுரமானதும் இவருள் எழுதவேண்டும் என்ற உத்வேகம் மேலும் அதிகரித்தது.

## இலக்கியப் பிரவேசம்

*1964*ஆம் ஆண்டில் சிற்பி சரவணபவன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த கலைச்செல்வி எனும் சஞ்சிகையில் **பிழைப்பு** எனும் தலைப்பில் இவரது முதலாவது சிறுகதை பிரசுரமானது. தொடர்ந்து பல சிறுகதைகளை இலங்கையில் வெளிவந்து கொண்டிருந்த வாரப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதினார். இந்தியாவிலிருந்து வெளிவரும் தரம்வாய்ந்த தமிழிலக்கிய சஞ்சிகையான கலைமகளிலும் இவரின் சில கதைகள் பிரசுரமாகியுள்ளன.

எழுத்தாளர் ஞானசேகரன் அவர்கள் இதுவரை பத்து நூல்களை வெளியிட்டுள்ளார். அவையாவன:

1. காலதரிசனம்
2. புதிய சுவடுகள்
3. குருதிமலை
4. லயத்துச் சிறைகள்
5. கவ்வாத்து
6. புரிதலும் பகிர்தலும்
7. அவுஸ்திரேலியப் பயணக்கதை
8. அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்
9. ஞானசேகரன் சிறுகதைகள்
10. வட இந்தியப் பயண அனுபவங்கள்

ஞானசேகரன் தனது படைப்புகள் பற்றிய கருத்தியல் தொடர்பாக பின் வருமாறு தெரிவித்துள்ளார். “நான் மொழிவழி வாழ்வை உற்றுநோக்குகிறேன். எழுத்துக்கள் மூலம் வாழும் சமூகத்தைச் சித்திரிக்கிறேன்.



புதிய சுவடுகள் நாவலுக்கான தேசிய சாகித்திய மண்டலப் பரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது எனது இலக்கியச் செயற்பாடு. இச்செயற்பாட்டின் நோக்கம் **மானுட நேயமும் சமூக மேம்பாடுந்தான்.** எழுத்தாளனுக்கு கோட்பாடுகள், தத்துவங்கள், இஸங்கள் எதுவும் அவனது பணட்ப்பூக்கத்திற்குத் தடையாக இருக்கக் கூடாது என்ற எண்ண முடையவன் நான். இலக்கியம் என்பது உணர்வோடு சம்பந்தப்பட்டது. அதனை அறிவோடு சம்பந்தப்படுத்தினால் தீர்மானங்களும் முடிவுகளுமே மிஞ்சும். அந்த முடிவுகளையும் தீர்மானங்களையும் தாண்டி அவனால் செல்லமுடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிடும். முன் தீர்மானங்களின் முடிவில் விருப்பு வெறுப்புகளின்அடிப்படையில்படைக்கப்படுவதுஇலக்கியமாகாது. சமூகத்தில்நிகழ்பவற்றைக் கூர்ந்து அவதானித்து நேர்மையான முறையில் பக்கச் சார்பற்ற நிலையில் பதிவுசெய்வதுதான் உண்மையான கலைப்படைப்பாக அமையும் என்பதில் நான் திடமாகவுள்ளேன்" (எனது இலக்கியத்தடம் -ஜீவநதி)

## சிறுகதையாசிரியராக...

### காலதரிசனம்

*1973*இல் வெளியானது. இது இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பாகும். இதில் இலங்கை கலாசாரப் பேரவை நடத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற 'ஒளியைத் தேடி' என்ற சிறுகதையும், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன இலக்கிய மன்றம் நடத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்ற 'ஒரு சின்னப்பையன் அப்பாவாகிறான்' என்ற கதையும், ஏனைய பத்துச் சிறுகதைகளுமாக *12* சிறுகதைகள் அடங்கியுள்ளன. இச்சிறுகதைத்தொகுதிக்கு பேராசிரியர் க. கைலாசபதி முன்னுரை வழங்கியிருந்தார். இம்முன்னுரையில் பேராசிரியர், நூலாசிரியர் தி. ஞானசேகரன் அவர்களைப் பற்றி குறிப்பிடும்பொழுது, "மன விகசிப்பும், கலை மெருகும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில் வளர்ச்சிபெற்ற சிறுகதை ஆசிரியர்" என்றார். *(15.04.1973)*

### அல்சேஷனும் ஒரு பூனைக் குட்டியும்

அல்சேஷனும் ஒரு பூனைக் குட்டியும் *(1998)* சிறுகதைத் தொகுதி. தற்போது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் B.A வகுப்பிற்குரிய பாட நூலாக வைக்கப்பட்டுள்ளது.

*1998* ஆம் ஆண்டு ஈழத்தில் வெளிவந்த ஆக்க இலக்கியங்களில் சிறுகதை சார்ந்த நூல்களில் மிகச் சிறந்தது எனச் சான்றோர் குழுவினரால் தெரிவு செய்யப்பட்டு வண்ணை கே. சிவராஜா ஞாபகார்த்தப் பரிசிலும் இலங்கை இலக்கியப் பேரவையின் சான்றிதழும் இந்நூலுக்கு வழங்கப்பட்டன.

இந்நூல் பற்றி பேராசிரியர் க. அருணாசலம் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். "திரு. ஞானசேகரன் அவர்கள் கதைகளின் உள்ளடக்கத்தில் மட்டுமன்றி உருவ அமைதியிலும் தீவிர கவனம் செலுத்தியுள்ளமையை அநேகமாக எல்லாக் கதைகளிலும் காணமுடிகிறது. உள்ளடக்கங்களுக்கேற்ற மிகப் பொருத்தமான தலைப்புகள், உயிர்த் துடிப்புமிக்க நடை, மிகப்பொருத்தமான கதைத் திருப்பங்கள், சிந்தனையைத் தூண்டும் முடிவுகள், பண்பு நலனை




**அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்**
**நூல் வெளியீட்டு விழா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தி.ஞானசேகரன்
சிறுகதைகள்
நூல் வெளியீட்டு விழா**

வெளிப்படுத்தும் பாத்திர வார்ப்புகள், உவமைப் பிரயோகங்கள், கச்சிதமான வருணனைகள் முதலியன அவரது கதைகளுக்குத் தனிச் சோபையை அளிக்கின்றன".

## தி. ஞானசேகரன் சிறுகதைகள்

*30 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு, 2005இல் வெளியானது.*

*2005ஆம் ஆண்டில் யாழ். இலக்கிய வட்டத்தினரால் சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான நாவேந்தன் விருதினைப் பெற்றது.*

பேராதனைப் பல்லைக்கழகப் பேராசிரியர் துரை மனோகரன் இவரது கதைகள் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"எழுத்தாளர் தி. ஞாசேகரனின் சிறுகதைகள் அவரது எழுத்தாளுமையைக் காட்டுகின்றன. அவரது சிறுகதை ஒவ்வொன்றும் ஒவ்வொரு அனுபவத்தைத் தருகிறது. அவர் வெறும் கதை சொல்லியாக விளங்குவதில்லை. கதாசிரியர் என்ற படைப்பாளுமையோடு அவர் திகழ்கிறார். கதை சொல்லும் முறையிலும் உத்திகளிலும் ஞானசேகரன் போதிய கவனஞ்செலுத்துகிறார். அவரது கதாபாத்திரங்களின் உரையாடல்கள் இயல்பாகவே அமைந்துள்ளன. 'மண்புழு', 'கருவறை எழுதிய தீர்ப்பு' ஆகிய சிறுகதைகள் புதிய பொருண்மையைக் கொண்டவையாக விளங்குகின்றன. ஞானசேகரனின் சிறுகதைகளில் 'அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்', 'காட்டுப் பூனைகளும் பச்சைக்கிளிகளும்' கட்டறுத்த பசுவும் ஒரு கன்றுக்குட்டியும்' ஆகியவை உலகத்தரம் வாய்ந்த சிறுகதைகளாக விளங்குகின்றன. உலகத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியிலும் இவரது சிறுகதைகளில் கணிசமானவை பங்களிப்புச் செலுத்துகின்றன. தி.ஞானசேகரன் தமிழ்நாவல் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தியது போலவே தமிழ்ச் சிறுகதைத்துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். இலங்கையின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராக அவரை அவரது படைப்புகள் இனங்காட்டுகின்றன".

# நாவலாசிரியராக...

## புதிய சுவடுகள் (நாவல்)

*1977இல் இவர் எழுதிய முதல் நாவல் 'புதிய சுவடுகள்' வெளியாகியது. 'வீரகேசரி' அக்காலத்தில் ஒரு நாவல் போட்டியை நடத்தியது. அதற்கென எழுதப்பட்டதே இந்த நாவல். பின்னர் இந்நாவல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்தது. இந்நாவல் சாதிப்பிரச்சினையை கருவாகக்கொண்டது. 1977ஆம் ஆண்டுக்கான அரச தேசிய சாகித்திய விருதினைப் பெற்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாவல் பற்றி பேராசிரியர் சு. வித்தியானந்தன், "ஆழமான சமுதாயப் பார்வை வீசி நிற்கும் இவரது நாவல் சுபிட்சமும், செழுமையும் நிறைந்த புதியதொரு காலத்தை தரிசித்து நிற்கின்றது" (06.03.1978) என்றும், பேராசிரியர் க. அருணாசலம் "யாழ்ப்பாண மண்ணுக்கே சிறப்பாகவுரிய பிரச்சினை யொன்றினை அதற்குரிய காரணிகளை அறிவுபூர்வமாக அணுகி உணர்ச்சி பூர்வமாகத் திட்டமிட்ட கதையம்சத்துடன் இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தின் ஊழல்களையும், போலித்தனங்களையும், மாறிவரும் கருத்தோட்டங்களையும் இந்நாவல் சித்திரிக்கின்றது" (15.03.1980) என்றும் குறிப்பிட்டிருந்தனர்.

## குருதிமலை (நாவல்)

1979இல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்தது. 1979ஆம் ஆண்டுக்கான தேசிய சாகித்திய விருதினைப் பெற்றது. இதுவொரு மலையக நாவல். இவர் மலையகத்தில் வைத்திய அதிகாரியாகத் தொழில் புரிந்ததால் அங்கு பெற்ற அனுபவம் இந்த நாவலை எழுதத் தூண்டியது.

இந்நாவல் 1981இல் தகவம் பரிசினையும் பெற்றுக் கொண்டது.

1986இல் ஈழத்தில் அதுவரை வெளிவந்த ஆக்க இலக்கியங்களில் நாவல் சார்ந்த சிறந்த நூல்களில் ஒன்றெனெ இலங்கை இலக்கியப் பேரவையின் சான்றிதழையும் பெற்றது.

இந்நாவல் பற்றி கலாநிதி நா. சுப்பிரமணியம் 1988 மல்லிகை இதழில் பின்வருமாறு எழுதியிருந்தார். "கதை சொல்லும் முறையிலும், தொழிலாளரது பண்பாட்டுக் கோலங்களைக் காட்டும் முறையிலும் ஞானசேகரன் அவர்களது ஆற்றல் விதந்து பாராட்டத்தக்கது. இதுவொரு இலக்கியம் என்ற வகையில் மட்டுமன்றி மலையக மக்களின் ஒரு காலகட்ட வரலாற்று ஆவணம் எனத்தக்க தகுதியும் பெற்றுள்ளது. பேரினவாதத்திற்குப் பணியாத தமிழுணர்வின் முதற்கட்ட வெற்றிக்கு கட்டியம் கூறிநிற்கும் படைப்பு இது எனலாம்."

மதுரை அமெரிக்கன் கல்லூரி விரிவுரையாளர் முனைவர் செ. போத்திரெட்டி, "குருதிமலை என் உள்ளத்தை பிணித்த உன்னதப் படைப்பு. அந்நாவலை அக்கரைத் தமிழ் எனும் முதுகலைத் தாள் ஒன்றிற்கு பாடநூலாக வைக்க முடிவு செய்துள்ளோம்" என்றார்.

இந்த அடிப்படையில் 1992 - 93 காலப்பகுதியில் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் எம்.ஏ. பட்டப் படிப்பிற்குப் பாடநூலாகக் குருதிமலை நாவல் தெரிவுசெய்யப்பட்டது.

குருதிமலை நாவல் இதுவரை மூன்று பதிப்புக்களைப் பெற்றுள்ளது.

மேலும், இந்நாவல் 2002இல் சிங்கள மொழியில் "தலென யகட" என்ற மகுடத்தில் மொழிபெயர்க்கப்பட்டு கொடகே நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளரான கலாநிதி விமல் சுவாமிநாதன் அவர்கள் இந்த நாவலை மொழிபெயர்த்திருந்தார். இந்நாவல் சிங்கள வாசகர்கள் மத்தியிலும் இவரை அறிமுகம் செய்து வைத்தது.

## லயத்துச்சிறைகள் (நாவல்)

லயத்துச்சிறைகள் 1994இல் வெளிவந்த மலையக நாவல். 1995இல் சிறந்த நாவலுக்கான மத்திய மாகாண கலாசார அமைச்சின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. 1994இல் இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த நாவலுக்கான சான்றிதழையும் பெற்றுள்ளது.

**"ஞானசேகரனின் சிறுகதைகளில் 'அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்', 'காட்டுப் பூனைகளும் பச்சைக்கிளிகளும்', 'கட்டறுத்த பசுவும் ஒரு கன்றுக்குட்டியும்' ஆகியவை உலகத்தரம் வாய்ந்த சிறுகதைகளாக விளங்குகின்றன. உலகத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியிலும் இவரது சிறுகதைகளில் கணிசமானவை பங்களிப்புச் செலுத்துகின்றன."**

- பேராசிரியர் துரை மனோகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2006 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய எழுத்தாளர் விழா



2011 ஆம் ஆண்டு சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு



பேராசிரியர் கா.சிவத்தம்பி பவள விழா



2002 ஆம் ஆண்டு மானுடத்தின் தமிழ்க்கூடல் நாவல் அரங்கிற்குத் தலைமை

இந்நூல் பற்றி பேராசிரியர் எஸ். தில்லைநாதன் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். "மலையக மக்கள் தங்களது எதிர்கால வாழ்க்கைக்குத் தயார் செய்துகொள்ள, தமது சொந்தக் காலிலே நிற்கவேண்டுமென்ற நிதர்சன உண்மையை இந்த லயத்துச் சிறைகள் நாவல் வெளிப்படுத்துகின்றது. தோட்டப் பிரதேசத்திலேயே வாழ்ந்து அவர்களது யதார்த்தங்களை மிகத் தெளிவாக அறிந்து இந்த நாவலைப் படைத்திருக்கிறார் நூலாசிரியர். அவரது படைப்பாற்றல் பாராட்டுக்குரியது."

இந்நூலின் இரண்டாம் பதிப்பு *1998*இல் வெளியாகியது.

### கவ்வாத்து (குறுநாவல்)

*1996*இல் தேசிய கலை இலக்கியப் பேரவையும், சுபமங்களாவும் இணைந்து நடத்திய குறுநாவல் போட்டியில் பரிசு பெற்றது.

*1996*இல் மலையக வெளியீட்டகத்தின் வெளியீடாக வெளிவந்தது.

'விபவி கலாசார மையத்தின்' *1996*இல் வெளிவந்த சிறந்த படைப்பிற்கான 'தங்கச்சங்கு' விருதும், சான்றிதழும் பெற்றது.

*1997*இல் மத்திய மாகாண சாகித்திய விழாவில் சிறந்த நாவலுக்கான விருதினையும் பெற்றது.

இந்நூல் பற்றி பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். "திரு. ஞானசேகரனின் இந்தக் குறுநாவல், மலையகப் பெருந்தோட்டத் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினையை நோக்குகிறது. அது தொழிற்சங்கங்களின் பயன்பாடு என்பதாகும். எந்தத் தொழிற்சங்க இயக்கம் அவர்களின் சமூக - பொருளாதாரத் தனித்துவங்களை உணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் நல்வாழ்க்கைக்குப் போராடிற்றோ, இன்று அதே அந்த மக்களின் ஒற்றுமையின்மைக்கு வழிவகுக்கும் சமூகக் கருவியாக மாறியுள்ள நிலைமையை இந்தக் குறுநாவலிலே காண்கிறோம். மலையகப் பெருந்தோட்டத் தமிழர்களை எதிர்நோக்கி நிற்கும் (இன்றைய) மிகப் பெரிய சவால் இது - இந்தப் பிரச்சினையின் ஒரு வெட்டுமுகத்தை ஒரு வன்மையான முனைப்புடன் இந்தப் படைப்புத் தருகின்றது".



கவ்வாத்து நாவலுக்கு மத்திய மாகாண சாகித்திய பரிசு ரணில் விக்கிரமசிங்க அவர்களிடமிருந்து...

## சிறந்த நேர்காணல்களைத் தந்தவராக...

### புரிதலும் பகிர்தலும்

அவுஸ்திரேலிய எழுத்தாளர்களுடனான நேர்காணல்களின் தொகுப்பு நூலே புரிதலும் பகிர்தலும்.

வீரகேசரியில் தொடராக வெளிவந்த இந்த நேர்காணல்கள் 1999இல் ஞானம் பதிப்பக வெளியீடாக நூலுருப் பெற்றது.

2003இல் மத்திய மாகாண கல்வி அமைச்சினால் பாடசாலை நூல் நிலையங்களுக்கு உகந்ததென பரிந்துரை செய்யப்பட்டு விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

### ஞானம் சஞ்சிகைக்கான 50ற்கும் மேற்பட்ட நேர்காணல்கள்

ஞானசேகரன், தான் நடத்திவரும் இலக்கிய சஞ்சிகையான ஞானத்தின் இலக்கியத் தரத்தினைப் பேணுவதற்காக பேரறிஞர்களினதும் மூத்த கலை இலக்கிய வாதிகளினதும் ஐம்பதிற்கும் மேற்பட்ட நேர்காணல்களைப் பெற்று அவற்றின் மூலம் அவர்களது கருத்துக்களையும் அறிவுரைகளையும் அனுபவங்களையும் பல்வேறுபட்ட கலை இலக்கியச் சிந்தனைகளையும் வெளிக்கொணர்ந்து அவற்றை ஞானம் சஞ்சிகையில் வெளியிட்டு வந்துள்ளார். இதில் கவிஞர்கள், கதாசிரியர்கள், இதழாசிரியர்கள், விமர்சகர்கள், பத்தி எழுத்தாளர்கள், கலைஞர்கள், பேராசிரியர்கள், புலம்பெயர் படைப்பாளிகள், பெண்ணிலைவாதிகள் எனப் பலதிறத்தினரது நேர்காணல்களும் இடம்பெற்றன. இவற்றில் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, முதுபெரும் எழுத்தாளர் எஸ்.பொ., செங்கை ஆழியான், தெளிவத்தை ஜோசப் ஆகியோரது நேர்காணல்கள் நீண்ட தொடர்களாக அமைந்தன. இவற்றில் முதல் மூவரது நேர்காணல்களும நூலுருப் பெற்றுள்ளன. இந்த நேர்காணல்கள் ஈழத்து இலக்கியத் துறையில் கடந்த ஐம்பது வருடகாலப் பகுதியில் நிகழ்ந்த மாற்றங்கள், வளர்ச்சிப் போக்குகள், எழுச்சிகள், முரண்பாடுகள் என்பவற்றை வெளிக்கொணர்வனவாய்

**ஞானத்தின் 150ஆவது இதழ் போர் இலக்கியச் சிறப்பிதழாக 600 பக்கங்களில் வந்து சாதனை படைத்தது. சஞ்சிகை வரலாற்றில் எந்த ஒரு சஞ்சிகையும் 600 பக்கங்களில் சிறப்பிதழை வெளிக்கொணரவில்லை. அத்தோடு இச்சிறப்பிதழை வெளிக்கொணர்ந்ததன் மூலம் நவீன தமிழ் இலக்கியத்தில் 'போர் இலக்கியம்' என்றவொரு தனியான பகுப்பை ஒரு நூற்கட்டமைபுக்குள் வெளிக்கொணர்ந்து அறிமுகம் செய்த பெருமையையும் இச் சிறப்பிதழ் பெற்றுக்கொண்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தன. இந்த நேர்காணல்கள் ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சிபற்றி அறிந்துகொள்ள விரும்பும் படைப்பாளிகளுக்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும், பல்கலைக்கழகத்தினருக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் பயன் மிக்கதாய் விளங்குகின்றன.

## பயண இலக்கியகர்த்தாவாக...

**அவுஸ்திரேலியப் பயணக்கதை (பயண இலக்கிய நூல்)**

தினக்குரல் பத்திரிகையில் வெளிவந்த இத் தொடர் ஞானம் பதிப்பக வெளியீடாக நூலுருப் பெற்றது.

2003இல் மத்திய மாகாண கல்வி அமைச்சினால் பாடசாலை நூல்நிலையங்களுக்கு உகந்ததெனப் பரிந்துரை செய்யப்பட்டு விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

**வட இந்திய பயண அனுபவங்கள் (பயண இலக்கியம்)**

இந்தப்பயண அனுபவக் கட்டுரைத்தொடர் 2009இல் தினக்குரலில் வெளியாகியது. இந்தத் தொடர்பற்றி பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவரும் பேராசிரியருமான வ. மகேஸ்வரன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "திருவாளர் தி. ஞானசேகரன் அவர்களை நாம் படைப்பாளியாகவே முதலில் இனங்கண்டோம். பின் அவர் இதழிய லாளராகவும், பத்தி எழுத்தாளராகவும், விமர்சகராகவும் பல்வேறு பரிமாணங்களை எடுத்துள்ளார். அந்த வகையில் அவர் தம் மனைவியுடன் பிதிர் கருமம் செய்ய வட இந்தியத் திருத்தல யாத்திரை சென்றதையும், வட இந்தியாவில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைத் தாம் கண்டு களித்ததையும் ஒரு படைப்பாளிக்குரிய நேர்த்திக்கமைய அல்லது எழுதத்தூண்டும் மனவிருப்பின் வெளிப்பாடாகப் படைத்துள்ளார்.

அநேகமான பிரயாண நூல்கள் ஒன்றில் யாத்திரை அல்லது சுற்றுலா என்ற வகையில் தனித்தனியே அமைவதுண்டு. திரு. ஞானசேகரனின் நூலில் இந்த இரண்டு துறைகளின் சங்கமத்தையும் காண முடிகின்றது. ஒன்று பக்திரசம் ததும்பும் சேத்திராடனம், மற்றையது தகவல் களஞ்சியத்துடன் சுற்றுலா - இவை இரண்டையும் ஒன்றுக்கொன்று முரணில்லாத வகையில் அவர் இணைத்துச் செல்வதைக் காணலாம். இதனால் இந்நூல் வாசிப்போருக்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. வாசித்தவுடன் ஒதுக்கிவிடும் நூலாக அல்லாமல், வாசிக்கவும் மனநிறைவு கொள்ளவும் பகிரவும் தகவல் திரட்டாகக் கொள்ளவும் ஏற்புடைமையுடைய நூலாக இது இருப்பதால் நூலாசிரியர் பாராட்டுக்குரியவராகின்றார்."

## கட்டுரையாசிரியராக...

ஞானசேகரன் பல்வேறு மலர்களுக்கு சிறப்புக் கட்டுரைகளை எழுதியுள்ளார். அவற்றுள் நீண்ட கட்டுரையாக அமைந்தது 'எனது இலக்கியத்தடம்' என்ற மகுடத்தில் 'ஜீவநதி' சஞ்சிகையில் வெளியாகிய தொடர் கட்டுரையாகும். 22 அத்தியாயங்களில் அமைந்த



**ஞானம் சஞ்சிகைக்காக எழுத்தாளர் வ. அ. அரசரத்தினத்துடனான நேர்காணல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**குருதிமலை நாவலுக்கான தேசிய சாகித்திய மண்டலப் பரிசு**

இக்கட்டுரைத்தொடர், ஞானசேகரன் எழுத்தாளராக உருவாக அவரது குடும்பப் பின்னணி எத்தகைய பின்புலமாக அமைந்தது என்பதையும் அவரது படைப்புகள் எவ்வாறு உருவாகின்றன என்பதையும், இலக்கியம் தொடர்பான அவரது கருத்தியல் சார்ந்த விடயங்களையும் அவரது இலக்கிய வாழ்வுடன் தொடர்புடைய பல்வேறு நிகழ்வுகளையும் விளக்குவதாய் அமைந்துள்ளது.

ஞானசேகரன் பலதரப்பட்ட கட்டுரைகளை தான் வெளியிட்டு வரும் ஞானம் சஞ்சிகையில் பிரசுரம் செய்வதற்கென எழுதியுள்ளார். மற்றும் சகோதர சஞ்சிகைகள், வாரப் பத்திரிகைகள், தான் பயின்ற பாடசாலைகளின் சிறப்பு மலர்கள், தனது கிராமத்தில் அமைந்துள்ள நிறுவனங்கள் வெளியிடும் சிறப்பு மலர்கள், கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கவென எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் எனப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இக்கட்டுரைகள் நூலுருவம் பெறவேண்டியது அவசியமாகும்.

## ஞானம் சஞ்சிகை இதழாளராக...

எழுத்தாளர் ஞானசேகரன் அவர்களின் இலக்கியப் பணிகளில் 2000ஆம் ஆண்டுக்குப் பின்பு உச்சமாகத் திகழ்வது ஞானம் சஞ்சிகை என்றால் மிகையாகாது. 'பகிர்தலின் மூலம் விரிவும், ஆழமும் பெறுவது ஞானம்' எனும் பணிக்கூற்றுடன் தொடர்ந்து மாதந்தோறும் வெளிவரும் ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி. ஞானசேகரன் ஆவார். இச்சஞ்சிகையின் இணையாசிரியராக இவரது மனைவி ஞானம் ஞானசேகரனும், நிர்வாக ஆசிரியராக மகன் ஞா. பாலச்சந்திரனும் விளங்குகின்றனர்.

ஞானம் சஞ்சிகையின் முதலாவது இதழ் 2000.06.06இல் வெளிவந்தது. ஒரு சஞ்சிகையானது அந்த நாட்டின் இலக்கியப் பாரம்பரியங்கள், இலக்கிய உலகில் ஏற்படும் மாற்றங்கள், வளர்ச்சிப் போக்குகள், கருத்தோட்டங்கள் போன்றவற்றின் காலக் கண்ணாடியாகத் திகழவேண்டும். புதிய எழுத்தாளர்கள் தோன்றி வளர வேண்டும். இக்கருத்தியலுக்கு

**லயத்துச் சிறைகள்**
**நாவலுக்கான மத்திய மாகாண**
**சாகித்திய பரிசினை**
**கௌரவ சௌ. தொண்டமான்**
**வழங்குகிறார்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையவே ஞானம் சஞ்சிகையின் உள்ளடக்கங்களிலும், செயற்பாடுகளிலும் கவனம் செலுத்தி வருவது அவதானிக்க முடிகின்றது.

ஒரு இலக்கிய சஞ்சிகையை தொடர்ச்சியாக வெளியிடுவதில் உள்ள சிரமம் அனைவரும் அறிந்ததே. ஆரம்பம் முதலே மாதந்தோறும் தவறாமல் ஞானம் சஞ்சிகையை வெளியிடுவதினூடாக ஞானசேகரன் ஒரு புதிய சாதனையைப் படைத்து வருகின்றார் என்றால் மிகையாகாது. இதுகாலவரையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட புதிய தலைமுறைப் படைப்பாளிகள் ஞானத்தில் உருவாகியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஞானத்தின் 150ஆவது இதழ் போர் இலக்கியச் சிறப்பிதழாக 600 பக்கங்களில் வந்து சாதனை படைத்தது. சஞ்சிகை வரலாற்றில் எந்த ஒரு சஞ்சிகையும் 600 பக்கங்களில் சிறப்பிதழை வெளிக்கொணரவில்லை. அத்தோடு இச்சிறப்பிதழை வெளிக்கொணர்ந்ததன் மூலம் நவீன தமிழ் இலக்கியத்தில் 'போர் இலக்கியம்' என்றவொரு தனியான பகுப்பை ஒரு நூற்கட்டமைபுக்குள் வெளிக்கொணர்ந்து அறிமுகம் செய்த பெருமையையும் இச் சிறப்பிதழ் பெற்றுக் கொண்டது.

ஞானம் இதழ்களை இலங்கை தென்கிழக்குப் பல்லைக்கழகம், சப்பிரகமுவ பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்லைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் சிலரும் இந்திய தஞ்சாவூர் பல்லைக் கழக மாணவர்கள் சிலரும் ஆய்வு செய்து தமது பி.ஏ., எம்.ஏ., எம்.பில். பி.எச்.டி. போன்ற பட்டப்படிப்புகளை நிறைவு செய்திருக்கிறார்கள் என்பது ஞானம் சஞ்சிகையின் இலக்கியத் தரத்திற்குச் சான்றாகிறது. இவ்வகையில் இவற்றின் உச்சமாக தஞ்சைப் பல்லைக்கழக மாணவி திருமதி ரேணுகாதேவி என்பவர் ஞானத்தின் முதல் 50 இதழ்களின் இலக்கிய தரத்தினை ஆய்வுசெய்து தனது முனைவர் (கலாநிதி) பட்டத்தை நிறைவுசெய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் இதுவரை காலத்தில் வெளிவந்த சஞ்சகைகளில் ஞானம் சஞ்சிகையே இத்தகைய உயர்மட்ட - கலாநிதிப் பட்ட ஆய்வுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம் 2010இல் தமிழ் நாடு குற்றாலத்தில் நடாத்திய 5ஆம் மாநில மாநாட்டில் 'ஞானம்' இதழாளர் ஞானசேகரனுக்கு இலக்கியத் துறையில் சிறப்பாகப் பணிபுரிந்மைக்காக தமிழ்த்தாய் அறக்கட்டளை விருது வழங்கிக் கௌரவித்தது.

தமிழக உயிர்மை இதழும் சுஜாதா அறக்கட்டளையும் இணைந்து நடத்திய போட்டியில் 2013இன் சிறந்த சிற்றிதழுக்கான விருதினைப் 'ஞானம்' சஞ்சிகை பெற்றுக் கொண்டது.

தனித்துவமான இணைய முகவரியை ஈழத்தில் முதலாவதாக அமைத்துக்கொண்ட தமிழ்க் கலை இலக்கிய சஞ்சிகை 'ஞானம்' சஞ்சிகையே. (www.gnanam.info)

அதேபோன்று 'ஞானம்' சஞ்சிகையே உலகில் முதலாவதாக தனது இணைய முகவரியை தமிழில் அமைத்துக்கொண்ட சஞ்சிகையாகும் (தளம்.ஞானம்.இலங்கை). ஞானம் சஞ்சிகையின் சகல இதழ்களையும் இந்த இணைய முகவரியில் பார்வையிடலாம்.



**தமிழ்நாடு, உயிர்மை – சுஜாதா அறக்கட்டளை வழங்கிய 2013இன் 'சிறந்த சிற்றிதழ்' விருதினை ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரன் பெறுகிறார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புப் பணி

ஞானசேகரன் அவர்கள் ஞானம் பதிப்பகம் என்ற நூல்வெளியீட்டகத்தை 1999 ஆம் ஆண்டு ஆரம்பித்து பலதரப்பட்ட இலக்கிய நூல்களை வெளியிட்டு வருகிறார். ஞானம் பதிப்பகத்தின் நூல்கள் தேசிய சாகித்திய விருது, மாகாண சாகித்திய விருதுகள் உட்பட பல்வேறு இலக்கிய நிறுவனங்களின் விருதுளைப் பெற்றுள்ளன. 17-03-2013 அன்று ஞானம் பதிப்பகத்தின் வெள்ளி (25) வெளியீடாக தமிழ் இலக்கியச் செல்நெறியில் ஒரு புதியவகை பயண இலக்கியப் படைப்பு முறைமையை அறிமுகப்படுத்தும் 'அங்கோர் உலகப் பெருங்கோயில்' நூலை வெளியிட்டதன் மூலம் பதிப்புத்துறையிலும் குறிப்பிடத்தக்க பங்காற்றி வருகிறார்.

## தொகுப்பாசிரியராக

ஞானசேகரன் பின்வரும் நூல்களின் தொகுப்பாசிரியராக விளங்கியுள்ளார்

- கருமுகில் தாண்டும் நிலவு (சிறுகதைத் தொகுப்பு)
- போர்க்காலக் கதைகள்
- பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி பவளமலர்
- சிறைப்பட்டிருத்தல் (சிறுகதைத் தொகுதி)
- கொக்கிளாய் மாமி (சிறுகதைத்தொகுதி)
- நகுலநாதம் (கீரிமலை சிவன்கோயில் கும்பாபிஷேக மலர் - 600 பக்கங்கள்)

## இலக்கியச் செயற்பாடுகள்

ஞானம் இலக்கியப்பண்ணை என்ற அமைப்பினை உருவாக்கி, அதன் அமைப்பாளராகச் செயற்பட்டு, ஈழத்தின் நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய சான்றோர்க்கும், சாகித்திய ரத்தினம், தேசத்தின்கண் போன்ற அரச கௌரவம் பெற்ற இலக்கிய கர்த்தாக்களுக்கும் விழாக்கள் எடுத்துக் கௌரவம் செய்ததோடு எழுத்தாளர்களுக்கு மணி விழாக்கள், பவள விழாக்களை நடத்தி கௌரவம் செய்துள்ளார். ஈழத்து இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்த படைப்பாளிகள் அமரத்துவம் எய்தியபோது இந்த அமைப்பின் மூலம் அவர்களுக்கு அஞ்சலிக் கூட்டங்ளை ஒழுங்குசெய்து அனுதாபம் செலுத்தியும் வந்துள்ளார்.

மேலும் இவரிடம் பல எழுத்தாளர்கள் தமது நூல்களுக்கு முன்னுரை பெறுவதை பெருமையாகக் கொண்டுள்ளனர். அந்த வகையில் இதுவரை 10ற்கும் மேற்பட்ட நூல்களுக்கு இவர் முன்னுரை அளித் துள்ளார். அவற்றுள் சில:

- ஏணியும் தோணியும் (சிறுகதைகள்)
- ஒரு மரணமும் சில மனிதர்களும் (சிறுகதைகள்)
- மீண்டும் வசந்தம்(நாவல்)
- சங்கானைச் சண்டியன் (குறுநாவல் + சிறுகதைகள்)
- கண்ணின் மணி நீயெனக்கு (நாவல்)
- குற்றமும் தண்டனையும் (சிறுகதைகள்)
- என் பேனாவின் நிதர்சனம் (கவிதைகள்)

சில புலம்பெயர் எழுத்தாளர்களும் இவரிடம் முன்னுரை பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**"இலங்கை இந்தியா ஆகிய இரு நாடுகளில் உள்ள இரண்டு பல்கலைக்கழகங்களில் உயர்மட்டப் பட்டப் படிப்புகளுக்கு முறையே இவரது சிறுகதைத் தொகுதி, நாவல் ஆகிய இரு வேறு ஆக்க இலக்கிய வடிவங்கள் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் தலை சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராக அவரை அவரது படைப்புகள் இனங்காட்டுகின்றன."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னின்று நடத்திய உலகளாவிய இலக்கிய மாநாடுகள்




**கலாபூஷணம் விருது 2004**

சர்வதேச எழுத்தாளர் மாநாட்டை *2011*இல் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த திரு. முருகபூபதி அவர்கள் அமைப்பாளராக இருந்து நடத்தத் தீர்மானித்தபோது அந்த மாநாட்டை நடத்துவதற்கான முக்கிய பொறுப்பை ஞானசேகரனிடம் கையளித்தார். ஞானசேகரன் மாநாட்டுக்குழுவொன்றைஅமைத்து சர்தேச எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் இலங்கைக்கான இணைப்பாளராகவும் இருந்து அக்குழுவின் ஒத்துழைப்புடன் மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார்.

*2012* ஆம் ஆண்டு கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் இலக்கியக் குழுச் செயலாளராக இருந்து உலகத்தமிழ் இலக்கிய மாநாடு ஒன்றை 'தமிழ் இலக்கியம் - இன்றும் நளையும்' என்ற தொனிப்பொருளில் சங்கத்தினரின் ஒத்துழைப்புடன் நடத்திய பெருமையும் ஞானசேகரனுக்கு உண்டு.

இவ்வாறு இரண்டு சர்வதேச ரீதியிலான இலக்கிய மாநாடுகளை திறம்பட நடத்தியவர் ஞானசேகரன்.

**ஞானசேகரன் பல்வேறு சர்வதேச மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் பங்குபற்றியுள்ளார்:**

*2001*இல் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற எழுத்தாளர் விழாவில் பங்குபற்றி 'புகலிட இலக்கியம்' தொடர்பான கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கினார்.

அதன்பின்னர் நடைபெற்ற அவுஸ்திரேலிய எழுத்தாளர் விழாக்களிலும் *(2004, 2006)* பங்குபற்றி அரங்கத் தலைமை ஏற்றும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துமுள்ளார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் *2002*இல் இடம் பெற்ற 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' இரண்டாம் நாள் நிகழ்வில் நாவல் அரங்குக்கு ஞானசேகரன் தலைமை தாங்கினார். இதில் பேராசிரியர் நந்தி, கலாநிதி குணராசா, பேராசிரியர் செ.யோகராசா, விரிவுரையாளர் விமல் சுவாமிநாதன் ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தனர்.

*2011*இல் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் கலந்து ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.

*2012*இல் கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்திய உலகத் தமிழ் இலக்கிய மாநாட்டில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.

*2013*இல் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னையில் நடத்திய 'அயல்நாட்டு தமிழ் இலக்கியங்கள்' தேசிய கருத்தரங்கத்தில் ஆராய்ச்சிக்கட்டுரை சமர்ப்பித்ததோடு ஓர் அமர்வுக்குத் தலைவராகவும் விளங்கினார்.

*2013* ஆகஸ்ட் மாத்தில் லண்டனில் நடைபெறவுள்ள தமிழியல் ஆய்வு மாநாட்டிலும் இவர் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்க அழைக்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவங்கள்

*1998 ஏப்ரல் மாத 'மல்லிகை' சஞ்சிகை தி. ஞானசேகரன் அவர்களின் புகைப்படத்தை தனது முகப்பட்டையில் பிரசுரித்து கௌரவத்தை வழங்கியது.*

அதேபோல 1998 அக்டோபர் அட்டைப்பட அதிதியாக கொழுந்து சஞ்சிகையும் இவரைக் கௌரவித்தது.

ஞானசேகரன் ஆற்றிவரும் இலக்கியப் பணிக்காக மலையக கலை கலாசார நிறுவனம் 2000 ஆம் ஆண்டில் **'ரத்தின தீப'** விருதினை அளித்து கௌரவித்தது.

இலங்கை அரசு இவருக்கு 2005 இல் **'கலா பூஷணம்'** விருது வழங்கிக் கௌரவித்தது.

இலக்கியவானில் ஆற்றிவரும் கலைச் சேவையை நயந்து புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசலை கல்விச் சமூகம் சார்பில் 11-09-2005 அன்று **'கலைஞானமணி'** என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

இலங்கையின் எழுத்துத்துறையின் மேம்பாட்டிற்கு ஆற்றிய மேலான சேவையைப் பாராட்டும் வண்ணம் உடத்தலவின்னை மடகே சிந்னை வட்டம் 28-12-2008 அன்று **'இதழியல் வித்தகர்'** விருது வழங்கிக்கௌரவித்தது.

கொழும்புக் கம்பன் கழகம் நடத்திய கம்பன் விழா - 2012இல் ஞானசேகரன் ஆற்றிவரும் இலக்கியப் பணிக்காக **மகாவித்துவான் சி.கணேசையர் விருது** வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கம்பன் கழகத்தினரின் வாழ்த்து பின்வருமாறு:

***அரை நூறு ஆண்டுகளாய் அயராது எழுத்துலகில்***
***நிறைவான புகழ்கொண்டு நிமிர்ந்தே நிலைத்த மகன்***
***மறையோதும் மரபுதித்தோன் மண்மீது 'ஞானத்'தை***
***உரமாக்கி அறிவுலகை உயர்த்திடவே வழிசெய்வோன்!***

சிங்கள தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் இவரது எழுத்துலக சாதனையைப் பாராட்டி 27-07-2013 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற விழாவில் ஞானசேகரனைக் கௌரவித்தது. அன்றைய கௌரவத்தின் ஓர் அங்கமாக இவர் எழுதிய 10 சிறுகதைகளின் சிங்கள மொழிபெயர்ப்பு நூல் 'பரதேசி' என்ற மகுடத்தில் கொடகே நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டது. இந்த மொழிபெயர்ப்பைச் செய்தவர் மூன்று மொழிக்குமான சத்தியப்பிரமாணம் செய்த பிரபல மொழிபெயர்ப்பாளர் ஹேமச்சந்திர பத்திரன ஆவார். இவர் இந்த நூலின் முன்னுரையில் ஞானசேகரனின் படைப்புக்கள் சர்வதேசத்தரம் வாய்ந்த படைப்புக்களுக்கு நிகராகவுள்ளன எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# அங்கம் வகிக்கும் அமைப்புகள்...

- ஞானம் இலக்கியப் பண்ணை - அமைப்பாளர்
- கொழும்புத் தமிழ்ச் சங்கம் - நூலகச் செயலாளர் (2009 - 2010)
- கொழும்புத் தமிழ்ச் சங்கம் - இலக்கியச் செயலாளர் (2011 - 2012)
- புன்னைநகர் நலன்புரிச் சங்கம் - தலைவர் (2009இல் இருந்து)
- சர்வதேச எழுத்தாளர் ஒன்றியம் - தலைவர், இலங்கை இணைப்பாளர் (2011இல் இருந்து)
- இலங்கை எழுத்தாளர்களின் தேசிய அமைப்பு - உப செயலாளர் (2011-2012)

**ஞானம் 150 ஆவது இதழ் 'ஈழத்து நவீன இலக்கியச் சிறப்பிதழ்' வெளியீட்டில் கலை இலக்கியவாதிகள் கௌரவம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக சேவை

"எந்தவொரு எழுத்தாளனுக்கும் சமூகம்பற்றிய அக்கறை கட்டாயம் இருத்தல் வேண்டும். அதனை அவன் ஒரு தார்மீகக் கடமையாகக்கொள்ள வேண்டும். அது அவனது எழுத்தில் மட்டுமல்ல அவனது செயற்பாடுகளிலும் காணப்படுதல் வேண்டும். அப்போதுதான் அவனது எழுத்தில் சத்தியம் இருக்கும்." என்று 'எனது இலக்கியத்தடம்' கட்டுரையில் தி. ஞானசேகரன் குறிப்பிடுகிறார். அந்தவகையில் தி. ஞானசேகரன் அவர்கள் போரினால் சிதைவடைந்த தனது கிராமத்தை மீளக் கட்டியெழுப்பும் பணியில் தன்னை இணைத்துக் கொண்டு இயங்கி வருகிறார். புன்னைநகர் நலன்புரிச் சங்கம் என்பது அவரது கிராமத்துக்கு சேவை புரிவதற்கான ஓர் அமைப்பு. அந்த அமைப்பின் தலைவராக தி. ஞானசேகரன் விளங்குகிறார். அவரது ஊரிலுள்ள பாடசாலை, வைத்தியசாலை, கணேச சன சமூக நிலையம், ஆயாக்கடவை ஐங்கரன் ஆலயம், ஆகியவற்றின் மேம்பாட்டிற்கான செயற்பாடுகளை இவர் புரிந்து வருகிறார்.

அத்தோடு ஊரிலுள்ள முன்பள்ளிக்கு (Pre School) கட்டடம் இல்லாத நிலையில் இவர் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு தனது சொந்தச் செலவில் ஒரு காணியை விலைக்கு வாங்கி அதனை முன்பள்ளி அமைப்பதற்காக நிர்வாகத்திடம் அன்பளிப்புச் செய்துள்ளார். அத்தோடு புன்னை நகர் நலன்புரி சங்கத்தினூடாக பணம் சேர்த்து முன்பள்ளி கட்டட வேலைகளை நிறைவு செய்ததோடு அதற்கான தளபாடங்களையும் தனது சொந்தப் பணத்தில் வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூலகச் செயலாளராகவும், இலக்கியச் செயலாளராகவும் தலா இரண்டு வருடங்கள் பணிபுரிந்து பல சமூக இலக்கியச் சேவைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

இவர் நூலகச் செயலாளராகக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் பணியாற்றிய காலத்தில் தமிழ்ச் சங்க நூலகத்தில் உள்ள அத்தனை நூல்களையும் (ஏறத்தாழ 50,000 நூல்கள்) நவீன தொழிநுட்ப முறையில் கணினியில் பதிவு செய்வதற்கான மென்பொருளை உருவாக்கி பதிவுகளை மேற்கொள்ள ஆவன செய்ததோடு அதற்கென ஒரு கணினியையும் தமிழ்ச்சங்கத்துக்கு வழங்கியுள்ளார். நூலகத்தில் உள்ள நூல்களைப் பார்வையிட்டுத் தெரிவு செய்வதற்கும் கணினியின் பதிவுகளோடு நூல்களை கொடுக்கல் வாங்கல் செய்வதற்குமான மென்பொருளும் இவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஞானசேகரன் அவர்கள் ஓர் அகில இலங்கை சமாதான நீதவானுமாவார்.

## நிறைவாக...

தி. ஞானசேகரன் அவர்களின் எழுத்துகள் பல வழிகளிலும் முத்திரை பதித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இவரது கதைகள் சமூகமயமானவை. சமூக யதார்த்தங்களை வெளிப்படுத்தக்கூடியவை. அத்துடன், பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய வகையில் கருத்துக்களை கதை வடிவிலே முன்வைத்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

மேலும், இலங்கை இந்தியா ஆகிய இரு நாடுகளில் உள்ள இரண்டு பல்கலைக்கழகங்களில் உயர்மட்டப் பட்டப் படிப்புகளுக்கு முறையே இவரது சிறுகதைத் தொகுதி, நாவல் ஆகிய இரு வேறு ஆக்க இலக்கிய வடிவங்கள் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் தலை சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராக அவரை அவரது படைப்புகள் இனங்காட்டுகின்றன.

ஈழத் தமிழ் இலக்கியத்திலும் உலகத் தமிழ் இலக்கியத்திலும் அசையா இடம்பெற்ற தி. ஞானசேகரன் தற்பொழுது தனது மனைவி மக்களுடனும் ஒன்பது பேரப்பிள்ளைகளுடனும் நிறைவான வாழ்வை வாழ்ந்து வருகிறார்.

இவரது இந்த நிறைவான வாழ்வுக்கு அவரது மனைவி ஞானலட்சுமி என்றும் உறுதுணையாகவுள்ளார்.

ஞானசேகரன் இலக்கியத்தில் பல்வேறு சாதனைகளைப் புரிந்தாலும் கர்வமின்றி பழகுவதற்கு இனிமையான சுபாவமுள்ளவர்.

**இவரது தொடர்பு முகவரி:**

**தி. ஞானசேகரன்,** 3-பி, 46ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06, இலங்கை.

3B – 46th Lane, Colombo-06, Sri Lanka. +94 11 25086013 + 94 777 306 506 Fax: + 94 112 362 862

மின்னஞ்சல்: editor@gnanam.info www.gnanam.info www.gnanam.lk தளம்.ஞானம்.இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PROFILE of Dr. T. Gnanasekaran



Dr. T. Gnanasekaran is a prominent writer as an important person in the Sri Lankan Tamil literary World. He had been in the field for the last five decades.

He writes short stories, novels, articles, literary criticism, and travelogues He is also engaged in journalism and publication He edits the popular literary journal Gnanam.

He was born on 15-04-1941at Punnalaikkadduvan, a village in Jaffna. He got his Primary education in a Tamil Vidyalaya in his village and the Secondary education at Uumparai Hindu College and higher education in Colombo Medical College.

Gnansekaran is a doctor by profession

Though he has been a medical practitioner, he is deeply involved in the study of Tamil literature. In addition he has obtained the Bachelor of Arts degree specializing in Tamil.

He has written and published ten books and his two novels 'Kurithi Malai' and 'Puthiya Suvadugal' won the National Sakithya Awards.

His two other novels namely 'Layathu Siraikal' and 'Kavwathu' were recognized by the Central Provincial Council and won awards for his contribution.

His novel 'Kuruthi Malai' depicted the deplorable conditions of the disadvantaged Tamil plantation workers. It is a prescribed text book for M.A. degree programmed by the Madurai American College in Tamil Nadu, India. This book is now into Sinhala Language.

One of his Short Story volumes titled "Alshesanum Oru Poonaikuddium' is a text for the Bachelor Degree programme conducted by the Sabaragamuwa University of Sri Lanka.

Dr. Gnanasekaran is the chief editor of monthly literary magazine 'Gnanam' since year 2000. It is noteworthy that this journal won the award of the best little magazine for the year 2013 from Uirmai –Sujatha Trust of Tamil Nadu, India

Dr. Gnanasekaran has been functioning as coordinator for Organizing the First International Tamil Writers' Conference held in Colombo in the Year 2010 and also functioned as literary secretary for the World Literary Conference Organized by Colombo Tamil Sangam in 2012.

Dr. Gnanasekaran has read several research papers at the International Writer's Conference held in(2010) Sri Lanka, and the World Literary conference Organized by Colombo Tamil Sangam (2012) and in Oversees Tamil Literary Conference Organized by Tamil Nadu Institute of International Tamil Research(2013) and World Research Centre For Tamilology -London

He is credited with the 'Kalabhooshanam' award given by the Government of Sri Lanka.

He is also functioning as the President of the International Tamil Writers Forum since 2011.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org